2013 ஏப்ரல் 9]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 181, மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன். ராஜா, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

181—

பேருந்து நிலையம்

***6352—திரு. பொன். ராஜா:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பொன்னேரி தொகுதியில் மாநகர போக்குவரத்துப் பேருந்து நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

பொன்னேரி தொகுதி, பொன்னேரி, மீஞ்சூர் மற்றும் ஆரணி ஆகிய 3 பேரூராட்சிகளை உள்ளடக்கியதாகும். பொன்னேரி, மீஞ்சூர் பேரூராட்சிகளில் ஏற்கெனவே பேருந்து நிலையங்கள் இயங்கி வருகின்றன. ஆரணி பேரூராட்சியில், ஆரணி அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியின் அருகே 1.5 ஏக்கர் பரப்பளவில் ரூ.90 இலட்சம் மதிப்பீட்டில் புதிய பேருந்து நிலையம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன். ராஜா அவர்கள்.*

திரு. பொன். ராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செவ்வாய்க்கிழமை என்றால் சிறுவாபுரி அருள்மிகு பாலசுப்பிரமணியர் கோயிலுக்குச் சிறப்பு. அதேபோன்று, இன்றைக்கு மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியிலே வாரந்தோறும் செவ்வாய்க்கிழமை கூடுதல்*

சிறப்பு சேர்க்கும் விதமாக மக்களைத் தேடிச் சென்று, குறைகளைக் கேட்டு, உடனடியாகத் தீர்வு கிடைக்கும் வகையிலே, மக்களைத் தேடி அரசு என்ற மாண்புமிகு அம்மா அவர்களின் 'அம்மா திட்டம்' (மேசையைத் தட்டும் ஒலி) என்ற வரலாற்றுச் சிறப்புமிக்க திட்டத்தினை வருவாய்த் துறையில் கொடுத்த போற்றுதலுக்குரிய தெய்வத் தாயை வணங்குகிறேன்.

பொன்னேரி தொகுதி, ஆரணி பேரூராட்சி 1899 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இன்றைக்கு 114 ஆண்டுகளைக் கடந்த பழமை வாய்ந்த அந்தப் பேரூராட்சியில் அந்தப் பகுதி மக்கள் கைத்தறி மற்றும் விவசாயத்தைப் பிரதானத் தொழிலாகக் கொண்டுள்ளனர். அவர்களின் நீண்ட நாள் கோரிக்கை அங்கு ஒரு பேருந்து நிலையம் அமைத்துக் கொடுக்க வேண்டும் என்பதாகும். இதற்கு வேண்டிய இடமும் மாண்புமிகு அமைச்சர் பார்வையிட்டு இந்த நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றும் விதத்திலே நிறைவேற்றித் தருவதாகக் கூறியுள்ளார்கள், அதற்காக மாண்புமிகு இதய தெய்வம், வாழும் மனித தெய்வம், அம்மாவின் அரசுக்கு அந்தப் பகுதி மக்களின் சார்பாகவும், என் சார்பாகவும் நன்றி கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

முற்பகல் 10-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ர.ம. பாபு முருகவேல் அவர்கள்.

திரு. ர.ம. பாபு முருகவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரணி நகராட்சியிலே இரண்டு பேருந்து நிலையங்கள் இருக்கின்றன. மக்கள் பெருக்கத்தின் காரணமாகவும், வாகனப் பெருக்கத்தின் காரணமாகவும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுடைய தலைமையிலே Town Planning Committee அமைக்கப்பட்டது. அந்தக் கமிட்டியின் மூலமாக நகருக்கு வெளிப்புறத்திலே, அருகிலே ஒருங்கிணைந்த பேருந்து நிலையம் அமைப்பதற்கு ஒரு கருத்துரு தயாரிக்கப்பட்டிருக்கின்றது. அது மாண்புமிகு அமைச்சருடைய கவனத்திற்கு வந்ததா என்றும், இல்லையென்று சொன்னால், மக்களுடைய நெடுநாளைய ஏக்கத்தைப் போக்குகின்ற விதமாக நகருக்கு வெளியிலே ஒருங்கிணைந்த பேருந்து நிலையம் அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்றும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதுபோன்று, மாவட்ட ஆட்சித் தலைவரும், மாவட்ட நிருவாகமும் ஆய்வு செய்து, கருத்துரு அனுப்பப்பட்டிருந்தால் அந்தக் கருத்துருவை ஆய்வு செய்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. பொன்னுப்பாண்டி அவர்கள்.

திரு. வெ. பொன்னுப்பாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீவில்லிபுத்தூர் பேருந்து நிலையம் ஊரின் மையப் பகுதியில் அமைந்துள்ளது. போக்குவரத்துக்கு மிகவும் நெருக்கடியாக அமைந்திருக்கின்ற அந்தப் பேருந்து நிலையத்தை பொதுமக்கள் பயன்படுத்துவதற்கு மிகவும் சிரமப்படுகிறார்கள். எனவே, ஊருக்கு ஒதுக்குப்புறத்தில் ஸ்ரீவில்லிபுத்தூர் பேருந்து நிலையத்தை அமைக்க அரசிடம் பரிசீலனை உள்ளதா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழைய பேருந்து நிலையங்கள் தொடர்ந்து செயல்பட்டு வரக்கூடிய பல்வேறு பேரூராட்சிகளில், நகராட்சிகளில் மக்கள் பெருக்கத்தின் காரணமாக, ஏற்கெனவே அமைக்கப்பட்டிருக்கின்ற அந்தப் பேருந்து நிலையங்களில் இடவசதி குறைவாக இருந்துகொண்டிருக்கின்றது. அதன் அடிப்படையிலே, நகராட்சி நிருவாகம் மற்றும் மாவட்ட நிருவாகம் பேருந்து நிலையம் அமைக்க வேறு இடங்களை ஆய்வு செய்து, நிலத்தைக் கையகப்படுத்தி, இந்த இடத்தில் வைக்கலாம் என்று

அவர்கள் கருத்துரு அனுப்பினால், அந்தக் கருத்துருமீது அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி அவர்கள்.

திரு. ஆர். சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலூர் நகர எல்லையில் இயங்கி வருகின்ற பேருந்து நிலையம் நகர்ப்புறத்தில் மிகவும் நெருக்கடியான இடத்தில் இயங்கி வருகின்றது. நகராட்சி வளர்ந்து வருகிற நகராட்சி என்ற காரணத்தினால் பொதுமக்கள் பேருந்து நிலையத்திற்கு வருவதற்கு அதிக போக்குவரத்து நெரிசல் ஏற்படுகின்ற காரணத்தினாலும், சென்னையிலிருந்து கன்னியாகுமரி வரைக்கும் செல்லுகின்ற விரைவுப் பேருந்துகள் எல்லாம் இந்தப் பேருந்து நிலையத்திற்கு வந்து செல்வதாலும் நிறைய இடையூறுகள் ஏற்படுகின்றன. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் மேலூர் தொகுதிக்கு எல்லாத் திட்டங்களையும் நிறைவேற்றிக் கொடுத்திருக்கின்றார்கள். அந்த அடிப்படையிலே மேலூரிலே, மேலூரைச் சுற்றி நான்கு வழிச் சாலையில், வெளியே பை-பாஸ் ரோடு வருகின்றது. அங்கே வருகின்ற பேருந்துகள் எல்லாம் பை-பாஸ் ரோட்டிலே நிறுத்தி பயணிகளை இறக்கி விட்டுச் சென்றுவிடுகின்றன. ஆகையால் அந்தப் பகுதியிலே, நகராட்சியின் சார்பிலே ஒரு பேருந்து நிலையத்தை அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன்னுப்பாண்டி அவர்களுக்குச் சொன்ன இக்கேள்விக்கும் பொருந்தும். ஏற்கெனவே பழைய பேருந்து நிலையங்கள் இயங்குகின்ற பல்வேறு நகராட்சிகளில் இட நெருக்கடி இருக்கின்றது. பேருந்துகள் கூடுதலாக இயக்கப்படுகின்ற காரணத்தினாலும், அங்கு பேருந்துகளை நிறுத்த போதிய இடம்

2013 ஏப்ரல் 9]

இல்லாத காரணத்தினாலும், நகருக்கு வெளியிலே பேருந்து நிலையம் அமைக்கப்பட வேண்டுமென்று கூறியிருக்கிறார்கள். அப்படி வெளியிலே பேருந்து நிலையம் அமைக்கப்பட வேண்டுமென்று சொன்னால், அதற்கு உரிய நிலம் கையகப்படுத்தப்பட வேண்டும். அப்படி உரிய நிலத்தைக் கையகப்படுத்துவதற்கு அந்த நகராட்சி நிருவாகம் அந்த இடங்களை ஆய்வு செய்து, கண்டறிந்து மாவட்ட நிருவாகத்திடம் ஒப்படைக்கின்றபட்சத்தில், மாவட்ட நிருவாகம், அரசுக்குக் கருத்துரு அனுப்புகின்ற நேரத்தில் அதை ஆய்வு செய்து நடவடிக்கை எடுப்பதற்கு உகந்ததாக இருக்கும் என்பதை இந்த நேரத்தில் கூறிக்கொள்கிறேன், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தப் பணியையும் ஒருங்கிணைந்து மேற்கொண்டு செய்வாரென்று சொன்னால், தொடர்ந்து அவர் கோருகின்ற தேவையை மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு நிறைவேற்றும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.வீ. கருப்பையா அவர்கள்.*

திரு. மு.வீ. கருப்பையா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோழவந்தான் தொகுதிக்குட்பட்ட வாடிப்பட்டி பேரூராட்சி, அலங்காநல்லூர் பேரூராட்சி, பாலமேடு பேரூராட்சி ஆகிய 3 பேரூராட்சிகளிலுமே மக்கள்தொகை மிக நெருக்கடியான நிலையில் உள்ளது. மேலும், அந்தப் பகுதியில் புறம்போக்கு நிலங்களோ மற்ற நிலங்களோ இல்லை. இருப்பினும், அருகில் சிறிது தூரத்தில் பணிமனைகள் அமைப்பதற்கு அரசிடம் சாத்தியக் கூறுகள் ஏதும் இருக்கிறதா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னதுபோல, இதுபோன்ற பேரூராட்சிகளில் புதிதாகப் பேருந்து நிலையங்கள்*

அமைக்கப்பட வேண்டுமென்றால் பல்வேறு நிருவாகப் பிரச்சினைகள் இருக்கின்றன. ஒரு புதிய இடத்தை நாம் பார்ப்போம் என்றால், அது அரசு நிலமாக இருக்காது, தனியார் நிலமாக இருக்கும். இப்போதைய சூழ்நிலையில் தனியார் நிலங்களின் விலை மிகவும் உயர்ந்திருக்கிறது. அதனடிப்படையிலே அந்தப் பேரூராட்சியோ அல்லது நகராட்சியோ உரிய இடங்களை ஆய்வு செய்து, அந்த இடத்தை மாவட்ட நிருவாகத்திடம் கொடுத்தால் மாவட்ட நிருவாகம் கருத்துருவை அரசுக்கு அனுப்பினால், அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 182, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

182—

தொழிற்பேட்டை

***22268—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், மார்த்தாண்டம் பகுதியில் தொழிற்பேட்டை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கன்னியாகுமரி மாவட்டம், மார்த்தாண்டம் பகுதியில் தொழிற்பேட்டை அமைப்பதற்கான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம் மார்த்தாண்டத்தில் காப்பிக்காடு பகுதியில் ஒரு தொழிற்பேட்டை இருக்கிறது. இது